[2021 பிப்ரவரி 27

(ஈஉ) மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.409,76,71,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.16,25,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஈஊ) மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 54–வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*